# மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

**எஸ்.எம்.எம்.மஸாஹிர்**

விரிவுரையாளர்

(இஸ்லாமியக் கற்கைநெறிப்பிரிவு)

இஸ்லாத்தின் மிக முக்கிய அடிப்படைகளுள் மறுமை நம்பிக்கையும் ஒன்றாகும். இந்த நம்பிக்கை இல்லாமல் ஒரு முஸ்லிம் இருக்கமுடியாது. அல்குர்ஆனும் அல்ஹதீஸும் இதனைப் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளன. மனிதனின் வாழ்வு இவ்வுலக மரணத்தோடு முடிவுற்று விடுவதில்லை. அதற்குப் பிறகும் அவனுக்கு வாழ்க்கை இருக்கின்றது. அவனது வாழ்வு இவ்வுலகில் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டதோ அதற்கேற்பவே அவனது மறுமை வாழ்வு அமையும். மனிதன் உலகில் செய்யும் ஒவ்வொரு செயலும் பதியப்படுகின்றன; அது பற்றிய விசாரணை மறுமையில் உண்டு என்பன போன்ற கருத்துக்களை இஸ்லாம் கொண்டுள்ளது. மறுமை வாழ்வு என்பது மரணத்தை அடுத்து நிகழும் பர்ஸ.'. வாழ்வு, மீண்டும் எழுப்பப்படுதல், விசாரணை, சுவர்க்கம், நரகம் போன்றவற்றோடு தொடர்புபடுகின்ற மிகநீண்ட வாழ்வாகும்.

**அல்குர்ஆன் மறுமை வாழ்வுக்கு அளிக்கும் முக்கியத்துவம்**

அல்குர்ஆன் மறுமை வாழ்வுக்கு மிகப்பெரிய முக்கியத்துவத்தை வழங்குகின்றது. அல்லாஹ்வை ஈமான் கொள்வதென்ற அம்சம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேயளவு முக்கியத்துவத்தை அல்குர்ஆன் மறுமை வாழ்வை விசுவாசிப்பதற்கும் வழங்குகின்றது. அது பல வசனங்களில் அல்லாஹ்வை ஈமான் கொள்வதோடு இணைந்ததாகவே மறுமை வாழ்வை ஈமான் கொள்வதையும் குறிப்பிட்டுள்ளது. (உ-க) "அவர்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்வார்கள்... (ஆல இம்ரான் 114) அல்குர்ஆன் மறுமை நாளில் ஏற்படும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட பல பெயர்களைக் கொண்டு மறுமை நாளை அழைக்கின்றது. மீட்டி எழுப்பப்படும் நாள், விசாரணைக்குரிய நாள், மூடிக்கொள்ளும் நாள், சூழ்ந்துகொள்ளக்கூடிய நாள், உறுதியாக நடந்தேறக்கூடிய நாள் என்பன அவற்றில் சிலவாகும். அத்தோடு மறுமையில் நடைபெறவுள்ள பல நிகழ்ச்சிகளையும் அல்குர்ஆன் விபரிக்கின்றது.

முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்வந்த நபிமார்களும் மறுமை உண்டு என்பதையே வலியுறுத்தியதாக அல்குர்ஆன் இயம்புகின்றது. "நிச்சயமாக மறுமை வந்தேயாகும். ஒவ்வொரு

ஆத்மாவும் அது முயற்சி செய்வதற்குத்தக்க கூலி வழங்கப்படுவதற்காக அதனை நான் மறைத்து வைத்துள்ளேன்." என அல்லாஹ் மூஸா (அலை) அவர்களிடம் குறிப்பிடுவதாக அல்குர்ஆன் சொல்கிறது. (தாஹா 15)

மறுமையை மறுப்பவர்களோடு வாதிடுகின்ற பல வசனங்களையும் அல்குர்ஆன் உள்ளடக்கியுள்ளது. "இவ்வுலக வாழ்க்கையைத் தவிர எமக்கு வேறில்லை. நாம் இறக்கின்றோம், ஜீவிக்கின்றோம், காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை என அவர்கள் கூறுகின்றனர். அது பற்றிய எவ்வித அறிவும் அவர்களுக்கில்லை. அவர்கள் (கற்பனையாக) எண்ணுகிறார்களே தவிர வேறில்லை". (அல் ஜாஸியா 24)

**மறுமை ஏற்படுவது சாத்தியமானதா?**

இறுதி நாள் ஏற்படமுன்பு இப்பிரபஞ்சம் அழிவுறுவதும் இறந்த மனிதர்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவதும் விசாரணை நடைபெறுவதும் செயல்கள் பதிவு செய்யப்படு வதும் சாத்தியமானவையே. அதற்கான ஆதாரங்கள் கீழ்வருமாறு:

01. 19ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட "வெப்பக்கடத்தில் விதி", வெப்பமானது வெப்பம் கூடிய பொருளிலிருந்து வெப்பம் குறைந்த பொருளுக்கு தொடர்ந்து கடத்தப்படுகின்றது. ஒரு கட்டத்தில் அது நின்றுவிடும். அப்போது உலகம் அழிவுறும் என்று கூறுகின்றது. இது குறித்து பிரபல விஞ்ஞானியான 'ஜேம்ஸ் ஜீம்ஸ்', "நவீன விஞ்ஞானம் வெப்பக்கடத்தில் விதியை ஏற்றுக்கொள்கிறது. இவ்விதி தனது இறுதிக்கட்டத்தை இன்னும் அடையவில்லை. அவ்வாறு அடைந்திருந்தால் நாம் தற்போது இப்பூமியில் இருந்திருக்கமாட்டோம்." என்கிறார். (Thy Mysterious Universe - p.133). இப்பிரபஞ்சம் ஒரு நாள் அழிவுறும் என்றே விஞ்ஞானிகளும் நம்புகின்றனர். அது ஒழுங்குமுறையாக செயற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ள பௌதீக விதிகள் எப்போது செயலற்றுப்போகின்றனவோ அப்போது இப்பிரபஞ்சம் அழிவைச் சந்திக்கும். இந்தக்கருத்தை அல்குர்ஆன் பல இடங்களில் தெளிவுபடுத்துகின்றது.

02. உலகில் மனிதன் வெளியிடுகின்ற வார்த்தைகளும் ஒலிகளும் அலைவடிவமாக வான்வெளியில் பதிவாகியுள்ளதாகவும் அவற்றைப் பலம் வாய்ந்த கருவிகள் மூலம் பதிவு செய்து செவிமடுக்க முடியும் எனவும் நவீன விஞ்ஞானம் , தொழில்நுட்பம் கூறுகின்றது. எனவே மனித செயற்பாடுகள் பதிவு செய்யப்பட்டு மீண்டும் எடுத்துக் காட்டப்படுதல் சாத்தியமானதாகும்.

03. "இன்று அவர்களது வாய்களுக்கு நாம் முத்திரையிடுவோம்.அவர்கள் (உலகில்) சம்பாதித்தவற்றை பற்றி அவர்களது கைகள் எங்களோடு பேசும். அவர்களது

கால்கள் சாட்சி சொல்லும்" (யாஸீன் 65). இந்த அல்குர்ஆன் வசனம் மறுமையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியைச் சொல்கின்றது. இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடப்பது சாத்தியமானது என்பதை தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் கெஸட் நாடாக்கள்,வீடியோ நாடாக்கள், பெக்ஸ், மின்னஞ்சல் போன்ற வசதிகளை வைத்துப் பார்க்கின்ற போது நம்மால் புரிந்துகொள்ளமுடியும். மனிதனின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் வாயால் சொல்லித்தான் வெளிக்கொண்டுவரப்படல் வேண்டும் என்ற ஒரு நிலை தற்காலத்தில் இவ்வுலகில் இல்லை என்பதை வைத்தே இம்மறுமை நிகழ்வு சாத்தியமானதுதான் எனக்கூறமுடியும்.

04. உடல், ஆன்மா ஆகியவற்றால் பின்னப்பட்டுள்ள மனிதன் மரணித்தபின் உடல் மண்ணோடு கலந்துவிடுகின்றது. ஆனால் அவனது ஆன்மாவின் முடிவு என்ன என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவ்வாறு ஆன்மாவின் விடயம் சூட்சுமமாக இருப்பதே மறுமை சாத்தியம் என்பதை உணர்த்துகின்றது.

05. தர்க்கவியல் ரீதியாக ஒரு விடயம் பற்றி எமக்குத் தெரியாவிட்டால் தெரியாது எனக்கூறமுடியுமே தவிர அது இல்லை, சாத்தியமில்லை எனக்கூறமுடியாது. அதிலும் குறிப்பாக சாத்தியப்படாது எனக்கூறப்பட்ட பல விடயங்கள் தற்காலத்தில் நடந்தேறியுள்ளன.

06. எல்லா விடயங்களும் புலனுணர்வுக்கு உட்பட்டே இருக்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. மனிதப் புலன் உணர்வுகள் எல்லா அம்சங்களையும் கிரகித்துக்கொள்ளக் கூடிய சக்தியுள்ளவையுமல்ல. எனவே புலனுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பல விடயங்கள் நிகழ்வது சாத்தியமே.

**மறுமையின் சாத்தியம் பற்றி அல்குர்ஆன்**

மனிதன் இறந்து, மண்ணோடு மண்ணாக மாறியதன் பின்னர் மீண்டும் அவன் எழுப்பப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவான் என்ற கருத்தை முற்கால மக்களும் தற்கால நாஸ்திகர்களும் மறுத்துவருகின்றனர். அதனை முறியடிக்கும் வகையில் அல்குர்ஆன் தன் வாதங்களை முன்வைக்கின்றது. அவற்றை கீழ்வருமாறு தொகுத்துக்கூறலாம்.

01. ஒரு பொருளை இல்லாமையிலிருந்து உருவாக்குவதை விட இருந்து அழிந்து போனதிலிருந்து உருவாக்குவது மிகவும் இலகுவானது என்பதை பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளும். எனவே மனிதனை ஆரம்பத்தில் எதுவுமில்லாத நிலையில் படைத்த அல்லாஹ் அவனை மீண்டும் உயிர்பெறச் செய்யவும் சக்திமிக்கவன்.

"அவன் தனது படைப்பை மறந்துவிட்டு ஓர் உதாரணத்தைக் கூறுகின்றான். உக்கிப் போயுள்ள எலும்புகளை உயிருட்டுபவன் யார்? எனக் கேட்கின்றான்.

அதற்கு நீர், முதன் முறையாகப் படைத்தவனே அதனை உயிர்ப்பிப்பான். அவன் ஒவ்வொரு படைப்பைப் பற்றியும் நன்கறிந்தவன் எனக்கூறும்." (யாஸீன் 79)

02. மரணம், வாழ்வு என்பதற்கான மாதிரியுருவாக தூக்கமும் விழிப்பும் காணப்படு கின்றது. மரணம் - தூக்கம் என்பது உடல் உறுப்புக்கள் செயற்பாடற்றுப் போத லாகும்.வாழ்வு - விழிப்பு என்பது அவ்வுறுப்புகளுக்கு மீண்டும் செயற்படும் சக்தி ஏற்படுவதாகும். எனவே மீண்டும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுகின்ற செயற்பாடு உலகில் மனிதன்,ஏனைய உயிரினங்களுக்கு மத்தியில் சாதாரணமாக நடைபெற்றுவரும் நிகழ்வாகும். ஆகவே மறுமையிலும் இவ்வாறான ஒரு செயல் சாத்தியமானது.

"அவன்தான் உங்களை இரவில் மரணிக்கச் செய்கின்றான். (தூக்கம்) மேலும் நீங்கள் பகலில் செய்கின்றவற்றையும் அவனறிகின்றான். பின்னர் குறிக்கப்பட்ட தவணையைப் பூர்த்தி செய்வதற்காக உங்களை எழுப்புகின்றான். உங்களது (இறுதி) மீட்சி அவனின் பக்கமே இருக்கின்றது. பின்னர் நீங்கள் (இங்கு) செய்து கொண்டிருந்தவைகளை உங்களுக்கு அவனறிவிப்பான்'.(அல் அன்ஆம் 60)

நபி (ஸல்) அவர்கள் தூங்குவதற்காக தனது விரிப்புக்குச் சென்றால் "அல்லாஹ்வே உனது திருநாமத்தால் உயிர்பெறுவேன், மரணிப்பேன்" என்றும் தூங்கி எழுந்தால் "எங்களை மரணிக்கச் செய்துவிட்டு உயிர்கொடுத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியன. நாம் அவனிடமே எழுப்பப்படுவோம்" என்றும் கூறுபவர்களாக இருந்தார்கள். (ஸஹீஹுல் புகாரி)

03. மனிதன் இயற்கையில் அவதானிக்கின்ற 'இறந்த பூமி உயிர்பெறுதல்' என்ற செயற்பாடும் மறுமையில் மனிதன் உயிர்கொடுத்து எழுப்பப்படுவது சாத்தியம் என்பதைக் காட்டுகின்றது."காய்ந்துவிட்டதாக நீர் பூமியைக் காண்பதும் அவனுடைய அத்தாட்சியாகும். அதன் மீது நாம் நீரை இறக்கி வைத்தால் அது செழிப்படைந்து வளர்கின்றது. அதனை உயிர்ப்பித்தவன் நிச்சயமாக மரணித்தோரையும் உயிர்ப்பிக்கக்கூடியவன்." (ஹாமீம் ஸாஜ்தா 39)

04. பெரும் பிரமாண்டமான படைப்பினங்களைப் படைத்த அல்லாஹ்வுக்கு மனிதனை மீண்டும் உருவாக்குவது மிகவும் இலகுவானது என்பதைப் பகுத்தறிவுள்ள எவரும் ஏற்றுக்கொள்வர்.

"நிச்சயமாக வானங்களையும் பூமியையும் படைத்து அதனால் சோர்வேதும் ஏற்படாத அல்லாஹ் மரணித்தோரை உயிர்ப்பிக்க ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? ஆம் நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளின்

மீதும் மிக்க ஆற்றலுடையவன்" (அல் அஹ்ஸாப் 33)

" வானங்களையும் பூமியையும் படைத்தவன் அவர்களைப் போன்றதைப் படைக்கச் சக்தி பெற்றவனாக இல்லையா? ஏன் இல்லை நிச்சயமாக அவனே மிகப் பெரும் படைப்பாளன், நன்கறிந்தவன்" (யாஸீன் 81)

05. உலகில் நடந்த, நடாத்திக்காட்டப்பட்ட பல சம்பவங்களை அல்லாஹ் திருமறையில் விளக்கிக்காட்டி, மறுமையில் உயிர்கொடுத்து எழுப்புவது ஆச்சரியமானதொன்றல்ல என்பதை விளக்குகின்றான்.

"இன்னும் இப்றாஹீம் என் இரட்சகனே, மரணித்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிப்பாய் என்பதை எனக்குக்காட்டு எனக்கூறியபோது அவன், நீர் ஈமான் கொள்ளவில்லையா? என்று கேட்டான். அதற்கவர் ஏன் இல்லை என்னுடைய இதய அமைதிக்காகவே (கேட்கின்றேன்) என அவர் கூறினார். (அதற்கு அல்லாஹ்) நான்கு பறவைகளைப் பிடித்து, அவைகளைத் துண்டாக்கி, அவற்றிலிருந்து ஒரு பகுதியை ஒவ்வொரு மலை மீதும் வைத்துவிடுவீராக. பின்னர் நீர் அழைப்பீராக. அவை உம்மிடம் வேகமாக வந்துசேரும்." (அல் பகரா 260)

06. மனித உடல் மண்ணோடு மண்ணாகக் கலந்து, எழும்புகள் உக்கிப் போனதன் பின்னரும் மனிதனை மீண்டும் உயிர்ப்பிப்பது சாத்தியமா என்ற கேள்விக்கு அல்குர்ஆன் கீழ்வருமாறு பதில் தருகின்றது.

"நாம் இறந்து (உக்கி) மண்ணாகிவிட்டாலுமா? (எழுப்பப்படுவோம்) அது தூரமான மீட்சியாகும் (என்று கூறுகின்றனர்). அவர்களிலிருந்து (இறந்தபின் அவர்களது உடலை எந்தளவு) பூமி (தின்று) குறைத்திருக்கிறது என்பதைத் திட்டமாக நாம் அறிவோம். மேலும், (அவர்களின் செயல்கள் பதியப்பட்டு) பாதுகாக்கப்பட்ட புத்தகம் நம்மிடத்தில் இருக்கின்றது." (காப். 3,4)

"மனிதன் (இறப்பெய்தி, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன பின்னர்) அவனுடைய எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவேமாட்டோம் என்று எண்ணுகின்றானா? ஆம்! அவனுடைய விரல்களின் நுனிகளை (முன்பிருந்தது போல் இணைத்துச் சரிப்படுத்தி) செவ்வையாக்க நாம் ஆற்றலுடையவர்களாகஇருக்கின்றோம்."(அல் கியாமா 3,4)

**மறுமை வாழ்வு இருக்கவேண்டி அவசியம்**

இவ்வுலகத்தை நன்கு உன்னிப்பாகக் கவனிக்கும் ஒருவர் இங்குள்ள விடைகாண முடியாத சில சிக்கல்களுக்கு மறுமை என்ற ஒரு வாழ்வு முறை இருக்கவேண்டியது அவசியம் என்ற முடிவுக்கு வருவார். அதற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

01. இஸ்லாத்தின் பார்வையில் மனிதன் மற்றைய படைப்பினங்களைவிட மிகவும் கண்ணியமானவன். பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் அவனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவனை அல்லாஹ் தனது பிரதிநிதியாகவும் ஆக்கியுள்ளான். பகுத்தறிவும் சிறப்பாற்றல்களும் நிறைந்தவனாக மனிதன் காணப்படுகின்றான். இத்தகைய மதிப்புக்கள் நிறைந்த மனிதனது வாழ்வு ஏனைய படைப்புகள் போன்று மரணத்தோடு முற்றுப்பெற்றுவிடுவது நியாயமல்ல. அவனுக்கு மறுமை வாழ்வு அவசியப்படுகின்றது.

02. இந்த உலகில் சிலர் தங்களது வாழ்வை மிகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் ஒழுக்கமுள்ளதாகவும் அமைத்துக்கொள்கின்றனர். ஆனால் அவர்கள்தான் அதிகமான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்படுகின்றனர். அசத்திய வாதிகளும் அநியாயக்காரர்களும் நீதியற்றவர்களும் எவ்வித கவலையுமின்றி ஏனையோரைச் சுரண்டி, ஏமாற்றி, படாடோபமாக வாழ்ந்து மரணிக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் சத்தியத்தை அசத்தியம் மண்டியிடவைத்து விடுகின்றது. இத்தகைய முரண்பாடு, மனிதனின் சாதாரண நியாய உணர்வுக்குப் பொருந்தா துள்ளது. எனவே நியாயவாதிகளுக்கு வெகுமதிகளையும் அநியாயக்காரர்களுக்கு தண்டனைகளையும் சரியாக வழங்குகின்ற மறுமைநாள் அவசியமாகின்றது.

03. மனிதன் இயல்பிலேயே பல ஆசைகளைக் கொண்டவன். அவற்றையெல்லாம் அவனால் இவ்வுலகில் அடைந்து கொள்ள முடிவதில்லை. இவ்வுலகின் பௌதீகவிதிகள், பொதுவான சட்டங்கள், ஒழுக்கவரம்புகள், சமூகக் கட்டுப்பாடுகள் போன்றன மனிதனின் ஆசைகளை முழுமையாக செயலுருப்படுத்தத் தடையாக உள்ளன. எனவே மனிதனின் ஆசைகளை நியாயமான முறையில் அடைந்து கொள்ள வாய்ப்பளிக்கவேண்டியுள்ளது. அது மறுமையில்தான் சாத்தியப்படும்.

04. இவ்வுலகின் சடப்பொருட்களும் சுகபோகங்களும் தண்டனை முறைகளும் வரை யறுக்கப்பட்டுள்ளதால் ஒருவனுக்கு நியாயமான வெகுமதியையோ அல்லது தண்ட னையையோ வழங்குவதற்கு இவ்வுலகம் போதாது. உதாரணமாக உயிர்களைக் காக்கின்ற மருந்தொன்றைக் கண்டுபிடித்தவருக்கு வெகுமதியாக மிக நீண்ட ஆயுளையும் மிக அதிகமான சுகபோகங்களையும் வழங்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் பௌதீக விதிகள் இதற்கு அனுமதிப்பதில்லை. அதேபோல் ஆயிரக்கணக்கான மனிதர்களை அநியாயமாக் கொன்று குவித்த ஒருவனுக்கு ஒரு முறை மாத்திரமே மரணதண்டனை வழங்கமுடியும். உண்மையில் இது நியாயமல்ல. எனவே நியாயமான முறையில் வெகுமதியையும் தண்டனை யையும் கொடுக்கின்ற ஓர் உலகு இருத்தல் வேண்டும். அதுவே மறுமையாகும்.

05. மனித இயல்பு நற்செயல்கள் செய்தால் அவை நல்ல முடிவுகளையே தரவேண்டும் எனவும் தீயசெயல்கள் தீமையான பிரதிபலன்களையே கொடுக்கவேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றது. ஆனால், இவ்வுலகில் பெரும்பாலும்இப்படி நடப்பதில்லை. இவ்வியல்பினைப் பூர்த்திசெய்யும் இடமாகவே நாம் மறுமையைக் காண்கின்றோம்.

06. 'Cant' என்ற ஜேர்மனிய தத்துவஞானி, "நீதி, நேர்மை, சத்தியத்திற்காகப் போராடுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் கடைசியில் எல்லோரும் இறந்துபோய் மண்ணோடு மண்ணாகிவிடுவோம். அதனால் உலக வாழ்வில் உச்ச இன்பத்தை அடைய முயலவேண்டும்" எனக் கூறுகின்றார். இத்தகைய கருத்துக்கள் மனிதவாழ்வின் ஒழுங்கையும் கட்டுக்கோப்பையும் அமைதியையும் அழித்துவிடக் கூடியன. இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளும் குற்றச்செயல்களும் இடம்பெறாமல் இருக்கவேண்டுமாயின் மறுமை நம்பிக்கை அவசியமாகின்றது.

07. உலக சட்டங்களிலிருந்து மனிதன் தப்பித்துக்கொள்ள பல்வேறு வழிமுறைகள் உள்ளன. திறமையான வழக்கறிஞர்களின் வாதத்திறன், பொய்ச்சாட்சி, நீதிபதியின் கருணை, இலஞ்சம், பொதுமன்னிப்பு, சட்டத்தில் உள்ள ஓட்டைகள் போன்றவைகளினால் மனிதன் தன்னைத் தண்டனை பெறுவதிலிருந்து காத்துக்கொள்கின்றான். எனவே இவ்வுலகில் சரியான நீதி செயற்படுவது இவற்றின் மூலம் தடுக்கப்படுகின்றது. ஆகவே பக்கச்சார்பற்ற சரியான நீதி கிடைக்கவேண்டுமாயின் மறுமை அவசியம்.

08. உலகிலுள்ள பிரமாண்டமான படைப்பினங்களுக்கு நீண்ட ஆயுள் வழங்கப் பட்டுள்ளது. இந்தப்பௌதீகப் பொருட்களுக்கு இவ்வாறு நீண்ட ஆயுள் கொடுக்கப் பட, உயர்ந்த, கண்ணியமிக்க , புத்திசாதுரியமும் செயற்சுதந்திரமும் பகுத்தறிவும் நிறையப்பெற்ற மனிதனுக்கோ அற்ப ஆயுளே கொடுக்கப்பட்டுள்ளது. நியாயமாக நோக்கினால் அவனது வாழ்நாள் குறுகியதாக இருக்கக்கூடாது. மனிதனது ஆசையும் அப்படித்தான். எனவே, உலக வாழ்வோடு அவனது வாழ்வு முற்றுப் பெற்று விடுவது பொருத்தமானதல்ல. தொடர்ந்த நீண்ட ஒரு வாழ்வு அவனுக்கு கிடைக்கவேண்டும். அதுவே மறுமை வாழ்வாகும்.

09. மறுமைவாழ்வு என்ற ஒன்று இல்லையெனின் இவ்வுலக வாழ்க்கைக்கு அர்த்த மில்லாமற் போய்விடும். அல்லாஹ் மனிதனை அறிவும் ஆற்றலும் சுதந்திரமும் பொறுப்பும் கடமையும் கொண்டவனாகவே படைத்துள்ளான். அவ்வாறு படைக்கப்பட்டவனுக்கு மறுமைவாழ்வு இல்லையெனில் மனிதனுக்கான கண்ணியம், அறிவு, சுதந்திரம், பொறுப்பு என்பவற்றுக்குப் பெறுமதி இல்லாமல் போய்விடும்.

மறுமை உண்டு, அதில் விசாரணை உண்டு. என்பதுவே வாழ்க்கையை அர்த்தப்படுத்தும். "நாம் உங்களை வீணாகப் படைத்தோம் என்றும் எங்களிடம் திரும்பக்கொண்டுவரப்பட மாட்டீர்கள் என்றும் நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? (அல்மு.'.மினூன் 115)

10. அறிவியல், பகுத்தறிவு, தர்க்கவியல், மானிடஇயல்பு என்ற ஆதாரங்களை நாம் இதுவரை முன்வைத்தோம். இவற்றுக்கெல்லாம் மேலாக அல்லாஹ்வின் வஹி, மறுமை என்ற ஒன்று உண்டு;. அது சாத்தியமானது, நிச்சயமாக நடந்தேயாகும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றது. ஒரு மு.'.மினைப் பொறுத்தளவில் வஹியின் கருத்துக்களையே அவன் முன்னுரிமை கொடுத்து ஏற்றுக்கொள்வான்.

**மறுமை நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள்**

மறுமை வாழ்வை ஈமான் கொண்டவர்களுக்கும் ஈமான் கொள்ளாதோருக்கும் இடையில் சிந்தனை, உளப்பாங்கு, ஒழுக்கப்பண்பாடு, நடத்தை போன்றவற்றில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்படுகின்றன. இந்த நம்பிக்கை கொண்ட சமூகங்களுக்கும் ஏற்றுக்கொள்ளாத சமூகங்களுக்கும் இடையில் இந்த வித்தியாசங்களை நாம் காணலாம். இது மறுமை நம்பிக்கை மனித வாழ்வில் பல தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்த்துகின்றது. அவற்றைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

01. மனித வாழ்வின் முதன்மையான நோக்கம் மறுமையில் வெற்றி பெறுவதாகும்; இவ்வுலக வாழ்வு ஒரு சோதனைக்களம்; இதில் கிடைக்கும் இன்பமோ, துன்பமோ நிரந்தரமானதல்ல என மறுமை நம்பிக்கையுள்ளவன் நம்புவான். மறுமை நம்பிக்கையற்றவன் தனது முழு நோக்கம் இவ்வுலகின் இன்பங்களையும் சுகண்டிகளையும் பூரணமாக அனுபவிப்பதாகும் என நம்பிச் செயல்படுவான்.

02. மறுமையில் பதில் சொல்லவேண்டும்; அங்கு நற்கூலியும் தண்டனையும் உண்டு என்பதால் மறுமை நம்பிக்கையுள்ளவன் மனிதநேயம், நல்லொழுக்கங்கள், நற்பண்புகள், சிறந்த மனப்பான்மை கொண்டவனாக இருப்பான். மறுமை நம்பிக்கையற்றவனிடம் தீயபண்புகள் அதிகரித்துக் காணப்பட இடமுண்டு.

03. ஒரு மு.'.மினின் வாழ்க்கை ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்மையும் மிக்கதாக இருக்கும். ஈமானில்லாதவனிடம் எப்படியாவது வாழ்தல் வேண்டும் என்ற போக்குக் காணப்படும்.

04. மு.'.மினிடம் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் , அடுத்த மனிதனோடு உள்ள உறவு, சமூகரீதியான தொடர்புகள் என்பன சீராகவும் ஒழுங்காகவும் அமைந்திருக்கும். மறுமை நம்பிக்கையற்றவனிடம் இந்தப் பண்பைக் காண்பதரிது.

05. மறுமையை விசுவாசிப்பவனின் உள்ளம் எப்பொழுதும் அமைதியும் சாந்தியும் தூய்மையும் பெற்றிருக்கும். துன்பங்கள், சோதனைகளின் போது பொறுமையாக இருக்கும் அவன், இன்பங்களின் போதும் அளவுமீறி நடத்துகொள்ள மாட்டான். "மு.'.மினின் விடயம் ஆச்சரியமாக உள்ளது. அவனது எல்லா விடயங்களும் நன்மையாகவே அமைந்துவிடுகின்றன. அவனுக்கு மகிழ்ச்சியான விடயங்கள் நிகழ்ந்தால் அதற்காக அவன் நன்றி செலுத்துவான். அது அவனுக்கு நன்மையாக அமையும். அவனுக்கு துன்பங்கள் நிகழ்ந்துவிட்டால் பொறுமையாக இருப்பான். அதுவும் அவனுக்கு நன்மையாக அமையும். இந்த நிலை மு.'.மினைத்தவிர வேறு யாருக்கும் இல்லை." என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்) . மறுமை விசுவாசமற்றவனிடம் மனக்குழப்பமும் கலக்கமும் மிகைத்துக் காணப்படுவதோடு உளரீதியான நோய்களுக்கும் நரம்புத் தளர்ச்சிக்கும் ஆளாகி, இறுதியில் தற்கொலைக்குக் கூடத் தம்மை ஆளாக்கிக்கொள்வதைக் காண்கிறோம்.

06. சிறிய, பெரிய விடயங்கள் அனைத்தும் பதியப்படுகின்றன; அவற்றிற்கான விசாரணை உண்டு; அதில் பதில் சொல்லியாகவேண்டும்; அதனை அடிப்படையாக வைத்தே மறுமையின் வாழ்வு தீர்மானிக்கப்படுகின்றது என்று நம்பும் மனிதன் குற்றச் செயல்கள், அநியாயமிழைத்தல், சமூக விரோதச் செயல்கள், வன்முறைகள் போன்வற்றில் ஈடுபடுவதற்கு தைரியம் பெறமாட்டான். தன்னைக் கண்காணிக்க, தண்டனை வழங்க எவருமில்லை என்ற சிந்தனையுள்ள மறுமையை ஏற்காதவன் குற்றங்கள், விரோதச் செயல்களில் தைரியமாக ஈடுபடுவான்.

07. ஒரு மு.'.மின் மிகவும் இரகசியமாக யாருமில்லாத போதும்கூட பாவங்கள் செய்யத் துணியமாட்டான்.ஆனால் மறுமை நம்பிக்கையில்லாதவன் தனக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாதா என எதிர்பார்த்துக் காத்திருப்பான். எனவே பொது வாகக் கூறுமிடத்து மனிதனின் ஆட்சியமைப்பு , பொருளாதார முறைமகள், தனிமனித, குடும்ப , சமூகவாழ்வு என்பவற்றில் எல்லாம் மறுமை நம்பிக்கையின் செல்வாக்கு நிச்சயம் படிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்:**


01. இஸ்லாம் உங்கள் பார்வைக்கு - ஹமூத் அப்த் அல் அத்தி
02. குத்பாப் பேருரைகள் - மௌலானா மௌதூதி
03. மரணத்துக்குப்பின் - மௌலானா மௌதூதி
04. இதுதான் இஸ்லாம் - மௌலானா மௌதூதி
05. Life After Death - மௌலானா மௌதூதி
06. அல்ஜாமிஆ - நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்
07. இஸ்லாமிய சிந்தனை- சஞ்சிகை - நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்